# நரியும் கொக்கும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்


www.worldtamilacademy.com

# நரியும் கொக்கும்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# நரியும் கொக்கும்





ஒரு காட்டில் பல மிருகங்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தன. அதில் ஒரு நரி மட்டும் எப்போதும் மற்ற மிருகங்களை ஏமாற்றி அவற்றைக் கண்டு மகிழ்ச்சி அடைந்து வந்தது. மற்ற விலங்குகளின் அன்பைப் பெற்ற கொக்கு ஒன்றும் அதே காட்டில் வாழ்ந்து வந்தது. ஒருநாள், கொக்கை ஏமாற்ற எண்ணிய நரி விருந்திற்கு அழைத்திருந்தது.



கொக்கும் வருவதாகச் சம்மதித்து விருந்திற்குச் சென்றது. நரி விருந்திற்கு சூப் ஒன்றைத் தயாரித்து, அச்சூப்பைத் தட்டையானத் தட்டில் வைத்து கொக்கிற்குக் கொடுத்தது. கொக்கினால் அதனைக் குடிக்க முடியவில்லை. ஆனால் நரி அவற்றை நக்கி நக்கிக் குடித்துவிட்டு, “இந்தச் சூப்பை உனக்காகச் செய்தேன். எப்படி இருக்கிறது?” எனச் சிரித்துக் கொண்டே கேட்டது.



கொக்கு தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து, நரியிடம் "நண்பனே! சூப் மிகவும் ருசியாக இருந்தது" என்று சொல்லியது. "இரவு நேரம் ஆகப் போகிறது, நான் செல்ல வேண்டும்", அதற்கு முன் "இன்று நீ எனக்கு விருந்து வைத்தாய், பதிலுக்கு நாளை நான் உனக்கு விருந்து வைக்க விரும்புகிறேன்." உன்னால் வர முடியுமா? என்று கேட்டது.



நரி கொக்கை ஏமாற்றி விட்ட சந்தோசத்தில் வருவதாக ஒப்புக்கொண்டது. அடுத்த நாள் கொக்கு பல இறைச்சிகளைக் கொண்டு சுவையான சூப் ஒன்றைத் தயாரித்தது. அவற்றின் மணம் காடு முழுவதும் பரவியது. நரியோ மிகவும் ஆர்வமாகச் சூப்பைக் குடிக்க வந்தது. ஆனால் கொக்கு மிகவும் வாய் குறுகிய குவளையில் சூப்பை வைத்து நரிக்குத் தந்தது.



நரியால் அந்தச் சூப்பைக் குடிக்க முடியவில்லை. கொக்கு நரியைப் பார்த்து “சூப் எப்படி இருக்கு?” என்று கேட்டது. நரியும் “சூப்பின் வாசனை அருமையாக உள்ளது. ஆனால் என்னால் குடிக்க முடியவில்லை என்று வருத்தத்துடன் கூறியது. மேலும் கொக்கிடம் மன்னிப்புக் கேட்டு, தன் தவறையும் திருத்திக் கொண்டது. கொக்கும் நரியும் நண்பர்கள் ஆனார்கள். இறுதியில் சூப்பை இருவரும் சேர்ந்து குடித்தார்கள்.



## கதையின் நீதி

நாம் யாரையும் ஏமாற்ற நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால் ஒருநாள் நாமும் ஏமாற்றப்படுவோம்.


நாம் யாரையும் ஏமாற்றக் கூடாது.